1993 ஏப்ரல் 29]

535—

துறையூர் நகரில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

19125—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லி விட்டார்கள். புரட்சித்தலைவி ஆட்சியில் இல்லையென்று சொன்னதில்லை. இருந்தபோதிலும் சொல்லி விட்டார்கள். எனது உப்பிலியாபுரம் தொகுதி மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய கோட்டையாக உள்ளது. எனவே, இதை மீண்டும் மறு பரிசிலனை செய்து, அங்கே வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களிடத்தில் குழந்தைகள் அமுது வேண்டுமென்று அழுதால் உடனே வழங்குவார்கள். நிலவு வேண்டுமென்று அடம் பிடித்தால் அதைப் பெற்று தருவது கடினம்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது. வேளாண் பொறியியல் கல்லூரியும் இருக்கிறது. இத்தனை இருந்தும், அந்த மாவட்டத்தில் இருக்கிற உப்பிலியாபுரம் தொகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்பது குழந்தைகள் நிலவுக்கு அடம் பிடிப்பதைப் போல இருக்கிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, என்னிடம் வாருங்கள், நான் இளைப்பாறுதல் தருகிறேன்' என்று ஏசு பிரான் கூறியிருக்கிறார்கள். அதைப்போல, புரட்சித் தலைவி அவர்களிடத்திலே நாங்கள் வரும்போது, அவர்கள் எங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறார்கள். அதுபோல, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் நல்ல அமைச்சர் என்று நன்றாகப் பெயர் வாங்கிக் கொண்டிருக்கும் எனது திருச்சி மாவட்ட அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு, அதற்கு விடை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் நிறைய திட்டங்களை, புரட்சித் தலைவியின் அரசு செய்து கொண்டு இருக்கிறது. உப்பிலியாபுரத்திலே உள்ள பச்சைமலையிலே மலை வாழ் மக்கள் வாழ்கிறார்கள். அந்த மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்களை அரசு வழங்கி, தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள், இந்தச் சட்டப்பேரவைக் கூட்டம் முடிவுற்று தன்னுடைய தொகுதிக்குச் செல்கிறபோது, இந்தத் துறை வழங்கக்கூடிய சலுகைகளை எல்லாம் அந்த மலைவாழ் மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே அவர்கள் பெற்றுத் தருவார்கள் என்று சொன்னால், அதுவே, அந்தத் தொகுதிக்கு மிகப் பெரிய பயனைத் தரும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 536, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

536—

மைலாப்பூர் தொகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுது பார்த்தல்.

*16900—திரு. டி. எம். ரங்கராஜன் :
மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மைலாப்பூர், பல்லக்குமானியம், நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், டுமிங்குப்பம், விசாலாட்சி தோட்டம், நாட்டான் தோட்டம் போன்ற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?